# பத்திரிக்கைச் செய்தி

## மின்அழுத்த கம்பியை இடமாற்றம் செய்ய லஞ்சம் வாங்கிய மின்வாரிய இளநிலை பொறியாளர் கைது

புகார்தாரர் திரு.பாரதி சங்கர் நாலாடின்புத்தூர் கிராமம், கோவில்பட்டி தாலுகா, தூத்துக்குடி மாவட்டத்தில் வசித்து வருகிறார். புகார்தாரரின் மனையின் மேலே உயரழுத்த மின்கம்பி செல்கிறது. மின்கம்பி சாலை போக்கிற்கு ஏற்ப மாற்றி அமைக்க வேண்டி நாலாடின்புத்தூர் கிராம மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்தில் கடந்த 11.01.2023ம் தேதி விண்ணப்பித்திருந்தார். 13.01.2023ம் தேதி அன்று புகார்தாரர் மின்வாரிய அலுவலகம் சென்றார், மேற்படி விண்ணப்பம் சம்பந்தமாக மேல் நடவடிக்கை எடுக்க திரு.பொன்ராஜ், இளநிலை பொறியாளர், மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகம், நாலாடின்புத்தூர் கிராமம், தூத்துக்குடி மாவட்டம் அவர்கள் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து மேலனுப்ப தனக்கு ரூ.10,000/- லஞ்சமாக கொடுக்க வேண்டுமென கேட்டுள்ளார். புகார்தாரர் தன்னால் அவ்வளவு பணம் கொடுக்க இயலாது என கூறியுள்ளார். பின்னர் 23.01.2023ந் தேதி திரு.பொன்ராஜ், இளநிலை பொறியாளர் அவர்கள் கையூட்டாக கேட்ட பணம் ரூ.10,000/-யை ரூ.5,000/-மாக குறைத்துள்ளார். லஞ்சம் கொடுக்க விரும்பாத புகார்தாரர், தூத்துக்குடி லஞ்ச ஒழிப்பு பிரிவில் அளித்த புகாரின் பேரில் நேற்று 24.01.2023ந் தேதி பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது, ஆனால் திரு.பொன்ராஜ், இளநிலை பொறியாளர், இலுவலகத்தில் இல்லாத காரணத்தினால் இன்று 25.01.2023, பொறிவைப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு திரு.பொன்ராஜ், இளநிலை பொறியாளர் லஞ்ச பணம் ரூ.5,000/-யை புகார்தாரரிடமிருந்து பெற்ற போது ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை அலுவலர்களால் கைது செய்யப்பட்டார்.

## PRESS NOTE

## JUNIOR ENGINEER, TNEB TRAPPED & ARRESTED FOR DEMAND AND OBTAINMENT OF BRIBE FOR CHANGING EB LINES

The complainant Tr.Bharathi Sankar, is residing at Nalatinputhur Village, Kovilpatti Taluk, Thoothukudi District. A high tension EB line was crossing above the complainant's land. Hence, on 11.01.2023, the complainant had applied for changing the EB line at the EB office, Nalatinputhur Village, Kovilapatti Taluk, Thoothukudi district. On 13.01.2023, the complainant went to EB officeand met one Tr.Ponraj, Junior Engineer of TNEB, Nalatinputhur, during which he demanded Rs.10,000 as bribe for him for processing the petition of the complainant. As the complainant refused, on 23.01.2023 Tr.Ponraj, Junior Engineer reduced the demand amount to 5,000/-. As not willing to give the bribe, the complainant approached the Vigilance and Anti-Corruption, Thoothukudi detachment and preferred a complaint. In this connection a case was registered and a trap was organized yesterday i.e. 24.01.2023, but Tr.Ponraj, Junior Engineer was not in office. Again a trap was organized today 25.01.2023 and during the trap Tr.Ponraj, Junior Engineer of TNEB, reiterated his demand and received the bribe amount of Rs.5,000/- from the complainant. The accused was caught red handed by the DVAC and remanded to judicial custody.